ஆவணி 28, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1991, செப்டம்பர் 13, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்கவாறான நெறிமுறைகளின்படி நிற்கவேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 19, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

ஆத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம்.

19—

*1309 திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை உயர்நீதி மன்றத்தின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூருக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முதல் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்ற சிறப்பினைப் பெற்றுத் தந்த இதய தெய்வம், முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது முதல் கேள்வியாக இருப்பதாலும் ஆத்தூர் ஒரு தாலுக்காவாக இருப்பதாலும், சேலத்திற்கு அடுத்த பெரிய நகரமாக இருப்பதாலும், இப்பகுதி மக்களுக்கு வசதியாக நீதிமன்றங்களுக்குச் செல்ல—சேலத்திற்கு 50கிலோ மீட்டர் தூரம் செல்ல-வேண்டியிருப்பதால் அங்கு ஒரு 'சப்-கோர்ட்' ஏற்படுத்தப் படுமா என பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வெ. தமிழரசு அவர்கள் 9–7–1991 ஆம் நாளிட்ட கடிதத்தில் அங்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்— construction of combined Court Building —அந்த கோரிக்கையைப் பற்றி இன்றைக்கு உயர்நீதி மன்றத்திலே நாங்கள் ஆலோசனை கேட்டிருக்கிறோம். அவர்களுடைய செயற்குறிப்பு வந்தவுடன் அந்த construction of combined court building என்ற முயற்சி நடக்கும். அதையொட்டி இவர் கேட்ட சப்-கோர்ட் பற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. வெ. தமிழரசு : அமைச்சரவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி என்றால் நன்றியோடு ஒரு கேள்வி கேட்கவேண்டும். அப்போதுதான் அந்த நன்றிக்கு ஒரு அர்த்தம் உரித்தாகும். இந்த மாதிரி உறுப்பினர்கள் நன்றி என்று துணைக் கேள்விக்குச் சொல்கிறபோது, நன்றிதெரிவிப்பதோடு ஒரு கேள்வி கேட்கவேண்டும். திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமை வாய்ந்த நீதிமன்றக் கட்டிடங்களைப் புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட நீதிமன்றத்தைப் பற்றிச் சொன்னால், அது பற்றி தனிக் கேள்வி போட்டால், அதற்குத் தகுந்த விவரங்கள் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன், ஆத்தூர் பற்றிய கேள்வி.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்திலே செயற்குறிப்பு இருப்பதாகக் கூறுகிறார்கள், சென்னை உயர்நீதிமன்றத்திற்கு 10 ஆண்டுகளாக குறிப்பு அனுப்பி எந்தவித பதிலுமே இல்லாமல் கிடப்பில் இருப்பது வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. ஆகவே தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து ஹைக்கோர்ட்டிடமிருந்து தகுந்த அறிக்கைகளைப் பெற்று உடனடியாக நீதிமன்றங்களை கட்ட ஏற்பாடு செய்யுமா என்பதை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற போது 10 ஆண்டுகளாக இது கிடப்பில் இருக்கிறது என்று சொன்னார்கள். அது தவறான தகவலாகும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இப்போதுதான் 9-7-1991 அன்றுதான் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறோம். அதுமட்டுமல்லாம அடிக்கடி உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியோடு தொடர்புகொண்டு இதுபோன்ற பிரச்சினைகளை சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொண்டு வருகிறது இந்த அரசு. வருகிற 17 ஆம் தேதிகூட ஒரு கூட்டத்தை தமிழக அரசு கூட்ட இருக்கிறது. அதில் ஹைக்கோர்ட்டின் ரிஜிஸ்ட்ரார், ஹோம் செக்ரட்டரி, பைனான்ஸ் செக்ரட்டரி, லா செக்ரட்டரி, லா மினிஸ்டர் ஆகியோர் அடங்கிய கூட்டம் நடைபெற இருக்கிறது. அப்போது உயர்நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கின்ற பிரச்சினைகளை, இதுபோன்று அரசு சார்பில் அவர்கள் சொன்ன பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்பற்றி, இரு தரப்பும் பேசி இந்த நீதிமன்றப் பிரச்சினைகளை துரிதப்படுத்த இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. தவசி.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1984 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் 'Director of Public Prosecution' என்ற பொறுப்பு எல்லா அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டு,' Director of Public Prosecutor தனியாக நியமனம் செய்ய நமது அரசு (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆத்தூரில் நீதிமன்றக் கட்டிடம் கட்டுகிற செயற் குறிப்பு பற்றியது. அது பற்றிய துணைக் கேள்வியாக இருந்தால் சரியாக இருக்கும். டைரக்டர் ஆப் பப்ளிக் பிராசிக்யூஷனுக்குப் போவது சரியல்ல. உட்காருங்கள்.